செய்தி வெளியீட்டு எண்.552 நாள்: 5.7.2010

# இந்து சமய அறநிலையத்துறையில் 57 செயல் அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் – மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு பன்னாட்டு தரச் சான்றிதழையும் துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழக திருக்கோயில்களில் முதுநிலை திருக்கோயில்களைத் தவிர இதர திருக்கோயில்களில் வருமான அடிப்படையில் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் நான்காம் நிலை செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு நிர்வாகம் நடைப்பெற்று வருகிறது. இதன் அடிப்படையில், தற்போது காலியாகவுள்ள செயல் அலுவலர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு நடத்தப்பட்டு நிலை–3 மற்றும் நிலை 4 செயல் அலுவலர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ள 57 செயல் அலுவலர்களுக்கு பணிநியமன ஆணைகளை மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (5.7.2010) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

மேலும், இந்து சமய அறநிலையத்துறை மூலம் நிர்வகிக்கப்பட்டுவரும் திருக்கோயில்களில் தமிழ்நாட்டிலேயே சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலின் திறமையான மேலாண்மை மற்றும் நிர்வாகத் திறனுக்காக வழங்கப்பட்டுள்ள பன்னாட்டு தரச் சான்றிதழை (DIN EN ISO 9001:2008) மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (5.7.2010) தலைமைச் செயலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்வுகளின்போது, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை முதன்மைச் செயலாளர் திரு.க.முத்துசாமி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.